தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 14-12-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**மாணவர்கள் படைப்பாளிகளாக பரிணமிக்க வேண்டும் -**
**வேளாண் பல்கலைக்கழக துணைவேந்தர் பேச்சு**

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் 105வது மாணவர் மன்ற துவக்க விழா பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா அரங்கில் இன்று (14-12-2015) நடைபெற்றது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக முதன்மையர் (வேளாண்மை) முனைவர் ச. மகிமைராஜா அவர்கள் தனது உரையில் கூறியதாவது, ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான வேளாண் வல்லுநர்களை உற்பத்தி செய்யும் கல்வி நிறுவனத்தில் 105வது மாணவர் மன்ற பொறுப்பாளர்களாக நியமனம் பெற்றது குறித்து பெருமைப்பட வேண்டும் என்றும், மாணவர்கள் தங்களது திறமைகளை கூர்தீட்டிக் கொள்ள இந்த மன்றங்களை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் கூறினார்.

விழாவில் சிறப்புரை ஆற்றிய தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் கு. ராமசாமி அவர்கள் மாறிவரும் வாழ்க்கைச் சூழலை எதிர்கொள்ள மாணவர்கள் நன்றாக படிப்பவர்களாக இருந்தால் மட்டும் போதாது, படைப்பாளிகளாகவும் இருக்க வேண்டும். மாணவர்களிடையே பொதிந்துள்ள படைப்பாக்கத் திறனை வெளிக்கொணர மாணவர்களுக்கு உதவும் வண்ணம் மன்றங்கள் செயல்பட வேண்டும் என்றார்.

மேலும் மாணவர்களின் வெற்றியானது ஏழு மணி நேர வகுப்புகளுக்குப் பிறகு ஓய்வு நேரத்தை எப்படி எதிர் கொள்கிறார்கள் என்பதைப் பொறுத்து இருக்கிறது. எனவே ஓய்வு நேரத்தை பயனுள்ளதாக மாற்றிக் கொள்ள மன்றங்கள் களம் அமைத்துத் தர வேண்டும் என்றும் கூறினார்.

தலைமையுரை ஆற்றிய சிறப்பு விருந்தினர் சென்னை அப்பல்லோ மருத்துவமனையின் வாழ்வியல் முறை பற்றிய சிறப்பு மருத்துவர் டாக்டர். கௌசல்யா நாதன் அவர்கள் நம்மைச் சுற்றி நடப்பவற்றை கூர்ந்து அவதானிப்பதன் மூலம் அதிகம் கற்றுக் கொள்ள முடியும். ஆசிரியர்கள் கற்றுக் கொடுப்பதை மட்டும் கற்றுக் கொள்வதை விட அவர்களின் உடனிருந்து அவர்களது வழிகளையும் செயல்களையும் உற்று கவனித்து ஊக்கம் பெற வேண்டும் என்றார்.

மாணவர் மன்றங்கள் இன்றைய சூழலுக்கு ஏற்ப ‘‘சுற்றுச்சூழல் மன்றங்களை’’ உருவாக்கி மற்ற கல்லூரி மாணவ – மாணவிகளுக்கு கற்றுத் தருபவர்களாக திகழ வேண்டும் என்றார்.

இளமைக் காலங்களில் முக்கிய தருணங்களில் எந்த முடிவு எடுப்பது என குழப்பம் வரும்போது, மூளை சொல்வதைக் கேளாமல் இதயம் சொல்வதைக் கேட்டு, உங்களின் பேரார்வத்தை எட்டும் திசையில் பயணத்திற்கு தயாராகிக் கொள்ள இந்த கல்லூரி வாழ்வையும் மாற்றங்களையும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் கூறினார்.

விழாவில் மாணவர்கள் தயாரித்த ‘‘பொழில்’’ என்ற இதழினை சிறப்பு விருந்தினர் டாக்டர். கௌசல்யா நாதன் அவர்கள் வெளியிட தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் கு. ராமசாமி அவர்கள் பெற்றுக் கொண்டார். விழாவில் பல்கலைக்கழக பதிவாளர் முனைவர் கு.ரா. ஆனந்த குமார் மற்றும் பல்கலைக்கழக அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

முன்னதாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக மாணவர் மன்ற செயலாளர் திரு. டி. சங்கர் அவர்கள் வரவேற்புரையும் மாணவர் மன்ற விளையாட்டு செயலர் தெபாவிஷ் நாயக் அவர்கள் நன்றியுரையும் வழங்கினர்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்